Sparkling International Journal of Multidisciplinary Research Studies | ISSN 2581-7574 (Online)

# தாயுமானவர் - குணங்குடியார் பாடல்கள் - ஒப்பீட்டுப் பார்வை

By

**ஹஸீனா, எஸ்.**

*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*தாயுமானவர் பாடல் திரட்டிலுள்ள பராபரக் கண்ணிப் பாடல்களும் குணங்குடியார் பாடல் திரட்டிலுள்ள நிராமயக் கண்ணிப் பாடல்களும் பாடுபொருள் நோக்கில் ஒப்பாய்வு செய்யப்படுகின்றன. தாயுமானவர் வேதாந்த சித்தாந்த மரபுகளை இணைத்துப் பாடியவர். குணங்குடியார் இசுலாமிய சூ.்.பிக் கோட்பாடுடன் தமிழ்ச் சித்தர் மரபையும் இணைத்துப்பாடியுள்ளார் எனலாம். இப்பாடல்கள் அனைத்தும் கண்ணி வகைப் பாடல்களில் அமைந்துள்ளவை. நிராமயக்கண்ணியில் அமைந்த பரம்பொருளும் இறையன்பனும் இறைவனும் தாயும், இறையன்பனில் நிலை, இறையன்பனின் பக்குவம், மனத்தின் இயல்பு, நிலையற்ற வாழ்க்கை, இறையருள், இறைவனை அடையும் வழி, ஐம்பொறிகளின் இழிந்த நிலை, நூலறிவின் பயனற்ற நிலை ஆகிய கருத்துக்களைக் கொண்ட பாடல்களில் தாயுமானவரின் சொல், கருத்து, தொடர் அகியவற்றின் தாக்கம் அதிகமாக உள்ளன. இவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.*

***கலைச்செற்கள்**: தாயுமானவர் பாடல், பராபரக் கண்ணிப் பாடல்கள், குணங்குடியார் பாடல், திரட்டிலுள்ள நிராமயக் கண்ணிப் பாடல்கள், ஒப்பாய்வு.*

## முன்னுரை

தாயுமானவர் வேதாந்த சித்தாந்த மரபுகளை இணைத்துப்பாடியவர். குணங்குடியார் இசுலாமிய சூ.்.பிக் கோட்பாடுடன் தமிழ்ச் சித்தர் மரபையும் இணைத்துப்பாடியுள்ளார் எனலாம். இப்பாடல்கள் அனைத்தும் கண்ணி வகைப் பாடல்களில் அமைந்துள்ளவை. இங்கு தாயுமானவர் பாடல் திரட்டிலுள்ள பராபரக் கண்ணிப் பாடல்களும் குணங்குடியார் பாடல் திரட்டிலுள்ள நிராமயக் கண்ணிப் பாடல்களும் பாடுபொருள் நோக்கில் ஒப்பாய்வு செய்யப்படுகின்றன.

## நோக்கம்

சூ.்.பி ஞானிகள் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு சூ.்.பி கோட்பாட்டுடன் தமிழ் சித்தர் மரபை இணைத்துப்பாடி உள்ளனர். தாயுமானவர் வேதாந்த சித்தாந்த மரபுகளை இணைத்துப்பாடியவர். குணங்குடியார் இசுலாமிய சூ.்.பிக் கோட்பாடுடன் தமிழ்ச் சித்தர் மரபையும் இணைத்துப்பாடியுள்ளார் இவற்றை ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமகும்.

நிராமயக்கண்ணியில் அமைந்த பரம்பொருளும் இறையன்பனும், இறைவனும் தாயும், இறையன் பனில் நிலை, இறையன்பனின் பக்குவம், மனத்தின் இயல்பு, நிலையற்ற வாழ்க்கை, இறையருள், இறைவனை அடையும் வழி, ஐம்பொறிகளின் இழிந்த நிலை, நூலறிவின் பயனற்ற நிலை ஆகிய கருத்துக்களைக் கொண்ட பாடல்களில் தாயுமானவரின் சொல், கருத்து, தொடர் அகியவற்றின் தாக்கம் அதிகமாக உள்ளன.

## பரம்பொருளும் இறையன்பனும்

ஒரு நாழி உப்பும், ஒரு நாழி நீரும் கலந்து பின்னர் ஒரு நாழி அளவை இருப்பது போல இறையன்பனும் பரம்பொருளோடு ஒன்று படுகிறான். உப்பிலிருந்து நீரை எவ்வாறு பிரிக்க

இயலாதோ அதுபோன்றே கடவுள் அருள் அடையப்பெற்ற இறையன்பனைப் பரம் பொருளிலிருந்து பிரிக்க முடியாது. குணங்குடி யார் "முப்பாழ் எய்திகோர்" என்று குறிப்பிடு வதைத் தாயுமானவர் "அயிக்கிய பரானந்தர்" என்று சுட்டுகிறார்.

நாழிஉப்பும் நாழிஅப்பும் நாழியாந் தன்மைமுப்
பாழெய்தி னாரிற்கோ பகராய் நிராமயமே.
(நி.க.155)

அப்பும் உப்பும் போன்ற அயிக்கபரானந்தர்
தமக்கு
ஒப்புஉவமை சொல்லவும் வாய்உண்டோ
பராபரமே. (ப.க.147)

**இறைவனும் தாயும்**

தாயில்லாப் பிள்ளையின் பாங்கை ஓரளவு நாம் அறிந்துக்கொள்ள முடியும். ஏனைய வாய்ப்புகள் யாவையும் நிறை நிலையில் பெற்றிருப்பதற கிடையில் தாயோடு இணங்கியிருப்பதை அடையப்பெறாத குழந்தைக்கு அவையாவும் பொருளற்றவைகளே. இறையன்பன் ஒருவனுக்கு அருள்தாகம் உருவெடுக்கும் பொழுது அவனுடைய மனநிலையும் தாயில்லாக் குழந்தையின் மனநிலைக்கு ஒப்பானதாகிறது.

தாயிருக்கப் பிள்ளை தளரா தொருபோதும்
நீயிருக்க நான்தளர நேரோ நிராமயமே
(நி.க.64)

தாய்இருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல்
எவ்விடத்தும்
நீஇருந்தும் நான் தளர்ந்து நின்றேன் பராபரமே
(ப.க.349)

நிலையில்லாத உலக ஆசைகளை உதறித் தள்ளிவிட்டுப் பரமனுடைய அருளை நாடி வேண்டுவானாகில் அக்கணமே அவன் அருளுக்கப் பாத்திரமாவான் என்பது இவ்விரு பாடல்களின் கருத்தாகும்.

**இறையன்பனின் நிலை**

பிறவிப் பெருங்கடலில் அழுந்திக் கிடக்கின்றவர் களுடைய போக்கும் வரவும் (இறப்பும் பிறப்பும்) இறையன்பனுக்கு முக்கியமானவை அல்ல. இறைவன் போக்குவரவற்றவன். கடவுள் நாட்டத்தில் நிலைத்திருப்பவன் மரணமில்லாப் பெருநிலைக்குத் தகதியுடையவன் ஆகிறான்.

ஆரிருந்தென் னார்பொயென் ஆவிக்
குறுந்துணையாம்
பேறுபெறச் செய்தாற் பிழைப்பேன் நிராமயமே.
(நி.க.32)

ஆர்இருந்து என்ஆர்போய் என்ஆர்அழுது
நின்அருளின்
சீர்இருந்தால் உய்வேன் சிவமே பராபரமே.
(ப.க.120)

இவ்விரு பாடல்களிலும் குணங்கடியாரும் தாயுமானவுரும் ஒரே கருத்தையே சுட்டுகின்றனர்.

**இறையன்பனின் பக்குவம்**

குணங்குடியார் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவற்றை முறையே கரும்பு, சாறு, பாகு, கற்கண்டு ஆகியவற்றுடன் ஒப்புமைப் படுத்துகிறார். ஒன்றிலிருந்து ஒன்று பக்குவப் படுத்துவது என்கிறார்.

விரிந்த சரியை முதல் மேவிநின்ற
மெய்ஞ்ஞானம்
கரும்புமுதல் கண்டெனவுங் கண்டேன்
நிராமயமே (நி.க.165)

கன்னல் தரும் பாகாய் கருப்பவட்டாய்
கற்கண்டாய்
இன்னமுதாய் என்உள் இருந்தாய் பராபரமே
(ப.க.248)

இறையன்பன் அடையும் பக்குவநிலை கற்கண்டுக்கு ஒப்பானது என்னும் கருத்தையே குணங்கடியாரும், தாயுமானவரும் கொண்டுள்ளனர்.

**மனத்தின் இயல்பு**

இடையறாது பலவிதமான எண்ணங்களை யெல்லாம் எண்ணிக் கொண்டிருப்பது மனத்தின் பாங்கு. பலவிதமான எண்ணங்களுக்கு ஆளாகும் போது மனம் துன்பமைடைகிறது. மனம் புண்ணாகிறது. அனால் கடவுளைப் பற்றிய ஒரே எண்ணம் நெஞ்சில் நிலைத் திருக்குமாகில் அம்மனிதன் பேறு மிகப்படைத்த வனாகிறான். கடவுளைப் பற்றிய எண்ணம் மட்டுமே தங்களை ஆட்கொள்ள வேண்டும் என்று குணங்குடியாரும், தாயுமானவரும் வேண்டுகின்றனர்.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யிடைந்து மனம்
புண்ணாவ தங்கோ புகுந்தேன் நிராமயமே
(நி.க.53)

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.
(ப.க.35)

**நிலயற்ற வாழ்க்கை**

உண்பது, உடுப்பது, அணிவது ஆகிய செயல்கள் ஞானியர்களின் உள்ளத்தில் எந்தவிதமான விகாரதையும் உண்டு பண்ணுவ தில்லை. உலகத்தார் சுகபோக வாழ்க்கையில் நாட்டம் கொள்கின்றனர். ஊலக வாழ்க்கை துன்பத்தைத்த தரும். ஆகவே மனம் போன போக்கில் வாழ்வது நிலையற்றது என்ற கருத்தைக் குணங்குடியாரும் தாயுமானவரும் சுட்டுகின்றனர்.

தின்றுடுத்திப் புண்டு திரியவெனப் பாவிமனச்
சண்டி புரளச் சரியோ நிராமயமே.
(நி.க.167)

உண்டு உடுத்துப் புண்டு இங்கு உலகத்தார் போல் திரியும்
தொண்டர் விளை யாட்டே சுகங்காண்
பராபரமே. (ப.க.144)

குணங்கடியார் உலக வாழ்க்கையை "பாவி மனச்சண்டி" என குறிப்பிடுவதைத் தாயுமானவர் "விளையாட்டு" என்கிறார்.

**இறையருள்**

வான்வெளி அந்தமில்லாதது. எல்லையற்றது. வானில் ஏறுவதற்காக நூல்டிணி வைத்தால் நீண்டு கொண்டே போகும். அதே பொன்று பரம்பொருளும் எல்லையற்றவன். எங்கும் சிறைந்திருப்பவன். பரமனின் அருளை நாடியிருத்தல் வேண்டும். பரமனின் அருள் கிடைக்கப்பெற்ற இறையன்பனின் நிலையை நூல் ஏணி மூலம் வானத்தை எட்டும் நிலையுடன் ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளது. குணங்குடியாரும் தாயுமானவரும் "வானேற நூலேணி" என்கின்ற உவமையைப் பயன்படுத்து கின்றனர்.

வானேற நூலேணி வைத்தார்போல் உன்னடிபால்
நானேறு வேனென்ற நாட்டம் நிராமயமே
(நி.க.197)

நூல்ஏணி விண்ஏற நூற்குப் பருத்திவைப்பார்
போல கருவி நன்னூல் போதம் பராபரமே.
(ப.க.186)

**இறைவனை அடையும் வழி**

மனிதனின் மன உணர்வுகள் மயிர்ப்பாலத்துக்கு ஒப்பானது. ஐம்பொறிகளின் மூலம் கிடைக்கின்ற

புலன் உணர்வுகள் நெருப்பு ஆற்றுக்கு ஒப்பானது. அகக்காரணம் என்னும் மன உணர்வையும், புறக்கரணம் என்னும் ஐம்பொறி களையும் அடக்கி ஆள்கிறவனே இறைவனை அடைவான் என்னும் கருத்தைக் குணங்கடி யாரும் தாயுமானவரும் குறிப்பிடுகின்றனர்.

நானே நெருப்பாறு நடக்கும் மயிர்ப் பாலமும்
யான்
தானே யெனுமறிவைத் தாராய் நிராமணமே
(நி.க.180)

ஏறுமயிர்ப்பாலம் உணர்வு இந்தவியங்கள்
நெருப்பு
ஆறுஎனவும் நன்றாய் அறிந்தேன் பராபரமே.
(ப.க.174)

**ஐம்பொறிகளின் இழிந்தநிலை**

ஐம்பொறிகளைப் பயன்படுத்தியே மனம், புத்தி, சித்தம், அங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் கீழான செயல்களில் ஈடுபடுகின்றன. ஆகவே ஐம்பொறிகளை அடக்கியாள வேண்டும். ஐம்பொறிகள் செயலற்று இருக்கும் நிலையில் அந்தக் கரணங்களை இறை வழிபாட்டில் ஈடுபடுத்த வேண்டும்.

ஐவர்க்கு மென்னை யடங்கச் சிறையாக்குவது
உண்யும் கருணைக் களதோ நிராமயமே.
(நி.க.273)

ஐவரோடும் கடாமல் அந்தரங்கசேவை தந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே.
(ப.க.252)

அந்தக் கரணங்களைப் பரத்தை நோக்கிச் செலுத்துகிறவனே இறையருளைப் பெறுவான் என்னும் கருத்தையே இருவரும் சுட்டுகின்றனர்.

**நூலறிவின் பயனற்ற நிலை**

நாடு, மன்னரின் கோட்டை அகியவை பாலரின் மணற்சொற்றுக்கு ஒப்பானது என்றும் நூலறிவைக் கொண்டு பரத்தை அறிந்துக் கொள்வது ஏட்டுசுரைக்காய் போன்றது என்றும் குணங்குடியார் குறிப்பிடுகிறார். நூலறிவினால் பரத்தை அறிந்துக் கொள்வது சின்னஞ் சிறார்களின் மனச்சோற்றுக்கு ஒப்பானது என்கிறார் தாயுமானவர்.

நாலுதிக்கிலும் விசயம் நாட்டுமன்னர்
கோட்டையெல்லாம்
பாலற்மனற் சோற்றின் படியாம் நிராமயமே.
(நி.க199)

பாட்டைப் படித்ததனால் பகர்ஞான
வானெனஏட்டுச்
சுரைக்காய்க் கியல்பாம் நிராமயமே.
(நி.க.200)

சின்னஞ் சிறியார்கள் செய்தமணல் சோற்றை
ஒக்கும்
மன்னும் கலைஞான மார்க்கம் பராபரமே.
(ப.க.187)

தாயுமானவர் ஒரு கண்ணியில் கூறிய செய்தியைக் குணங்குடியார் “இரண்டு கண்ணி யில்” குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

மனம் போன போக்கில் வாழ்வது நிலையற்றது என்ற கருத்தைக் குணங்குடியாரும் தாயுமானவரும் சுட்டிக் காட்டுகின்றனர். உணர்வையும், புறக்கரணம் என்னும் ஐம்பொறிகளையும் அடக்கி ஆள்கிறவனே இறைவனை அடைவான் என்னும் கருத்தைக் குணங்கடியாரும் தாயுமானவரும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு நிராமயக் கண்ணியிலுள்ள பாடல்களும் தாயுமானவரின் பராபரக் கண்ணியிலுள்ள சில பாடல்களும் ஒப்புமை உடையனவாகக் காணப்படுகின்றன. தமிழ் சித்தர் மரபை பின்பற்றியே குணங்குடியார்

பாடல்களை பாடியுள்ளார் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இவ்வாய்வு யோக நெறிகளை அறிந்து கொள்ளுவதற்கும் மிகவும் பயன்படும் எனலாம்.

## பார்வை நூல்கள்


1. தாயுமான சுவாமிகள். பராபரக் கண்ணி (மூலமும் உரையும்), சகுந்தலை நிலையம், பவளக்காரத் தெரு, மண்ணடி. சென்னை, 2007.
2. வடிவேலு முதலியார்., மா. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் (உரையுடன்), 9, பாரதிநகர் முதல் தெரு, தி.நகர், சென்னை, 2009.
3. சுப்பிரமணியன்.ச., வே. இலக்கிய வகையும் வடிவும், உலகத்தமிழாராட்சி நிறுவனம், சென்னை, 1984.
4. பிள்ளை, கா., சு. தமிழர் சமயம், சாரதா பதிப்பகம், சென்னை, 2002.


## To cite this article

*****************

Haseena, S. (2021). தாயுமானவர் - குணங்குடியார் பாடல்கள் - ஒப்பீட்டுப் பார்வை. *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 4*(2), 31-35.

************************************************************************************

## ABOUT THE AUTHOR



***DR. Haseena, S.,*** *is an Associate Professor in the Department of Tamil at the University College, Thiruvananthapuram, Kerala, India. She obtained her Ph.D from Kerala University on the topic "Peer Mohammed Appa's Gnanamanimalai A language study". She has published articles in various journals. She also participated National and International Seminars. She worked as an Assistant Tamil Translator in Kerala Government Secretariat Thiruvananthapuram, Kerala, India.*

************************************************************************************